
# திராவிடத்தால் வாழ்கிறோம்

867

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

14

**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**

# சமத்துவபுரத்தின் முன்னோடி கிராமம்!

*1938-ஆம் ஆண்டில், 'முதல் இந்தி எதிர்ப்புப் போரில்' பங்கேற்று தந்தை பெரியார் 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்று பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்ட போது, அவருடன் சிறையில் இருந்தவர்களில் ஒருவர் 'ஆனைமலை' நரசிம்மன். பட்டம் படித்தவர் என்பதால், சிறையில் முதல் வகுப்பை அதிகாரிகள் வழங்க, தன் தோழர்கள் எல்லோரும் சாதாரண வகுப்பில் இருக்க, தனக்கு மட்டும் முதல் வகுப்பு வேண்டாம் என்று மறுத்துவிட்டார் நரசிம்மன்.*

*ஆனால், ஆனைமலையில் வசதி படைத்த, செல்வாக்கான குடும்பம் இவருடையது. ராஜாஜி, சத்தியமூர்த்தி அய்யர் என அந்த காலத்தில் இவர் வீட்டில் பல தலைவர்கள் தங்கிச் சென்றுள்ளனர். 1906-ஆம் ஆண்டு நாராயண நாயக்கர்-குஞ்சம்மாள் தம்பதிக்கு கடைசி மகனாகப் பிறந்தவர் நரசிம்மன். சென்னை அடையாற்றில் பள்ளிப்படிப்பும், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பும் முடித்தவர். அண்ணன் சங்கர நாராயணன் சந்நியாசி ஆகிவிட்டதால், அச்சத்தில் நரசிம்மனுக்கு அவசர அவசரமாக திருமணம் முடித்து, ஆனைமலையிலேயே தங்கவைத்துவிட்டனர்.*

*அது, சுதந்திரப் போராட்டக் காலம் என்பதால், காந்தியடிகளை பின்பற்றி தேச விடுதலைப் பணிகளில் ஈடுபட்ட அவருக்கு, பின்னாளில் பெரியாரின் சுயமரியாதை*




*இயக்கத்தின் மீது பற்று திரும்பியது. திருமணம் செய்தால் ஆனைமலையிலேயே இருந்துவிடுவார் என்ற பெற்றோரின் கணிப்பைப் பொய்யாக்கி, தந்தை பெரியாருடன் சேர்ந்து தமிழ்நாடெங்கும், பிற மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் பயணப்பட்டார்.*

*1946-இல் மதுரையில் 'கருஞ்சட்டைப்படை' மாநாட்டுப் பந்தலுக்கு எதிரிகள் சிலர் தீ வைத்தபோது, தலைவர்களையும் தொண்டர்களை யும் ஓடி ஓடி பாதுகாத்தவர் நரசிம்மன். பெரியார் 1944-இல் வடநாட்டுப் பயணம் மேற்கொண்டபோதும், 1950-இல் பம்பாய் சென்றபோதும், 1954-இல் பர்மாவின் ரங்கூனில் நடைபெற்ற பௌத்த மாநாட்டுக்குச் சென்றபோதும் உடன் சென்றவர்களில் நரசிம்மனும் ஒருவர்.*

*1945-இல் பெரியாரால் நிறுவப்பட்ட கருஞ்சட்டைப் படையின் தொண்டர் படைத்தளபதியாகச் செயல்பட்டார்.*

*'பிரமணாள் கஃபே பெயர் அழிப்புப் போராட்டம்', 'சென்னை கபாலீஸ்வரர் கோயில் தமிழ் அர்ச்சனைப் போராட்டம்', 'குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம்', 'இந்தி எதிர்ப்புப் போராட்டம்', 'ராமன் படம் எரிப்புப் போராட்டம்', 'பிள்ளையார் உருவ பொம்மை உடைப்புப் போராட்டம்', 'அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம்' என பெரியார் முன்னெடுத்த முக்கிய போராட்டங்கள் அனைத்திலும் தவறாமல் பங்கெடுத்தவர்.*

*பெரியாருடன் வெளியூர்களுக்குப் பயணப்பட்ட அதேவேளையில், உள்ளூரிலும் ஏ.எம்.திருமூர்த்தி, ஏ.எம்.திருவேங்கடம், நஞ்சப்பன், கே.காளிமுத்து, காதர் மைதீன், முகமது அனிபா, ஆறுமுகம் என திராவிடர் கழகத் தோழர்கள் பலருடன் இணைந்து சுற்றுப்புற கிராமங்களில் பெரியாரின் கொள்கைகளை, 'துண்டறிக்கைகள்', 'தெரு முனைக் கூட்டங்கள்' வாயிலாகப் பரப்பி வந்தார். 1960-களுக்கு முன்பே ஆனைமலை சுற்றுவட்டாரத்தில் இரட்டைக்குவளை முறையை இல்லாமல் செய்தது இந்தப் படை.*

*அதுமட்டுமல்ல, 1949-ஆம் ஆண்டில் அன்னை மணியம்மையாரை பெரியார் பதிவுத் திருமணம் செய்தபோது, ஆனைமலைக்குச் சென்று, நரசிம்மன் வீட்டில்தான் 15 நாட்கள் தங்கியிருந்தார். பெரியாருடன் நரசிம்மன் கொண்டிருந்த நெருக்கத்தின் அடையாளத்திற்கு, இவற்றையெல்லாம் விட முக்கியச் சான்றாக இருப்பது, பெரியார் கூறிய ஆலோசனையை ஏற்று உள்ளூரில் சில புரட்சிகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டதுதான். குறிப்பாக, பெரியாரின் பெருங்கனவான ஊர்- சேரி பாகுபாட்டை ஒழிக்கத் துணிந்தவர் நரசிம்மன். 'சமத்துவபுரம்' என்ற புரட்சிகரமான திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் வழங்குவதற்கு முன்பே, மாதிரி சமத்துவபுரத்தைக் கட்டியெழுப்பினார் நரசிம்மன். அது அவரின் பெயராலேயே 'நரசிம்மன் நகர்' என்றாகி, இன்றும் நிலைபெற்று இருக்கிறது.*

*அந்த வரலாறு வரும் வாரத்தில்....*

**...பயணிப்போம்.**

## ஒன்றிய அரசின் அபாயகரமான அணி சேர்க்கை!

தேசத்தில் ஒரு 'அபாயகரமான அணி' சேர்க்கை நடந்து கொண்டிருக்கிறது என ஒன்றிய அரசின் மதச்சார்பு நடவடிக்கைகளை விமர்சனம் செய்துள்ளார் எழுத்தாளர் சூர்யா சேவியர். இதுதொடர்பாக, அவர் எழுதியுள்ள முகநூல் பதிவு பலராலும் பகிரப்பட்டு வருகிறது.

"அரசு என்பது மதத்திலிருந்து துண்டாகி, தனித்து இயங்குவதே. மதத்தின் உத்தரவுகள் அரசுக்கு இல்லை(?). இதன் அடிப்படையிலேயே இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. அவற்றின் முக்கிய அம்சங்கள் இவைதான்.

1.அரசு தன்னளவில் எந்த மதத்தையும் பரப்பாது, நிறுவாது, நடைமுறைப்படுத்தாது.

2.எந்த மதத்தையும் வளர்க்க, அரசு வருவாய் பயன்படுத்தப்படாது.

3.எந்த மதச்சார்பு நடவடிக்கை தொடர்பான பொருளாதாரச் செயல்பாடுகளையும் ஒழுங்குபடுத்த, அரசுக்கு அதிகாரம் உண்டு.

4.தீண்டாமை பழக்கம், பிரிவு 17-ன்படி சட்டவிரோதம்.

5.எந்த ஒரு நபரும், எந்த மதத்திலும் இருக்கவோ, நடைமுறைப்படுத்தவோ முழு சுதந்திரம்.

6. இந்த உரிமைகளைப் பொது ஒழுங்கு, நீதி அல்லது சுகாதார காரணங்களுக்காக சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த, அரசுக்கு அதிகாரம்.

7.இதுதொடர்பானவற்றுக்கு உச்சநீதிமன்றமே தீர்ப்பு வழங்கும்.

இந்த அதி உன்னதமான நிலையிலிருந்து விலகி, 'சங்பரிவார் கும்பல்கள்' அரசைக் கட்டுப்படுத்தத் தொடங்கி இருக்கின்றன. உலகில் ஏற்பட்ட அறிவியல் முன்னேற்றங்களும், கண்டுபிடிப்புகளும் மத அதிகாரத்தை எதிர்த்து, உருவானவைதான் என்பதை மறந்துவிடக்கூடாது. மதங்களையும், மதவெறி அரசியலையும் ஒரு சமூகம் கேள்வி கேட்கிறது என்றால், அச்சமூகம் முன்னேறத் துடிக்கிறது என்று பொருள்.

உலக அளவில் மார்க்சியமும் இந்திய அளவில் அம்பேத்கரியமும், தமிழ்நாட்டில் பெரியாரியமும் இக்கேள்வியைத் தீரத்துடன் கேட்டன" எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### 'தியாக மறவர்' தீனன் அவர்களின் சகோதரர்!



டி.கண்ணன்

1982-ஆம் ஆண்டு கழக வளர்ச்சி நிதி வழங்கும் வகையில், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாவட்டம் சார்பில், தலைவர் கலைஞர் அவர்களின் எடைக்கு எடை நாணயம் வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி சீத்தாபதி அவர்களின் தலைமையில், சி.ஐ.டி. நகர் 140-வது வட்டம் மதுரை வீரன் கோவில் அருகில் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாக் குழு உறுப்பினராகப் பணியாற்றியதையொட்டி, எனக்குப் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் உயிர் நீத்த 'தியாக மறவர்' தீனன் அவர்களின் சகோதரர் என்று என்னை அழைத்துப் பாராட்டியது, எனக்குக் கிடைத்த பெருமை.

**– டி.கண்ணன்,**
**169-அ வட்ட பொருளாளர்,**
**சைதை கிழக்கு, சென்னை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நீதிக்கட்சி நெல்லை மாநாடு!

1917-ஆம் ஆண்டு நவம்பர் 3-ஆம் நாள் திருநெல்வேலியில், 'கணபதி விலாஸ்' நாடகக் கொட்டகையில் 'நீதிக்கட்சி மாநாடு' நடைபெற்றது. இம்மாநாட்டில் முஸ்லிம்கள் ஏராளமாகக் கலந்துகொண்டு நீதிக்கட்சிக்கு ஆதரவளித்தனர். தெலப்ரோல் ஜமீன்தார் தலைமை வகித்தார். 'சிங்கம்பட்டி' ஜமீன்தார் வரவேற்புரையாற்றினார்.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

64

**``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''**

# அம்பலப்படும் ஆர்.எஸ்.எஸ். ஆளுநர்!




**திருவள்ளுவர் சனாதனவாதி என்றும், அவருடைய திருக்குறளின் அடிப்படையில்தான் தேசிய கல்விக் கொள்கை உருவாக்கப் பட்டுள்ளது என்றும் ஆளுநர் ஆர்.என்.ரவி சொல்லியிருக்கிறாரே?**

*ஆளுநர் ரவிக்கு இனிஷியில் ஆர்.என். என்று இருக்கலாம். ஆனால், அவர் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தில் ஊறித் திளைத்தவர் என்பதால், வள்ளுவருக்கு காவிச் சாயம் பூசுவது, வள்ளுவரையும் வள்ளலாரையும் சனாதனவாதிகள் என்று திரிப்பது இவையெல்லாம் வாடிக்கையாக உள்ளன. 'சனாதனம்' என்பது இது உயர்ந்தது, இது தாழ்ந்தது, இதில் எதையும் மாற்ற முடியாது, நிலையான தன்மை கொண்டது' என்று சொல்லக்கூடியதாகும். அதன் வழி வந்ததுதான் பிறப்பிலேயே உயர்வு-தாழ்வு கற்பிக்கும் வருணாசிரமம்.*

*வள்ளுவர் இந்த வருணாசிரமத்திற்கும், சனாதனத்திற்கும் எதிரான குரலாகத்தான் தன்னுடைய திருக்குறளை எழுதியிருக்கிறார். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று மனிதர்களைப் பிறப்பினால் உயர்ந்தவர்-தாழ்ந்தவர் என்று பிரிக்காதே என சனாதனத்தின் தலையில் சம்மட்டியால் அடித்திருக்கிறார் வள்ளுவர்.*

*நிலையானது-மாற்ற முடியாதது-கடவுள் நம் தலையில் எழுதிவைத்தது என்று சொல்லக்கூடியது சனாதனம். திருவள்ளுவரின் திருக்குறளோ, 'தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்' என்று சொல்கிறது. கடவுளாலேயே முடியாததைக்கூட மனித முயற்சி மாற்றிக் காட்டிவிடும் என்பதே வள்ளுவம். இது எப்படி சனாதனமாகும்?*

*திருக்குறள் அடிப்படையில்தான் தேசிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டது என்று ஆளுநர் ரவி சொல்வது, வாயால் வடை சுடும் மாஸ்டர் மோடியையே மிஞ்சிய உலக மகா உருட்டு. தேசிய கல்விக் கொள்கையை உருவாக்கித் தந்த கஸ்தூரிரங்கன் குழு உள்ளிட்ட யாரும் இப்படியொரு விளக்கத்தைக் கொடுத்ததில்லை. 'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றை யவை' என்று வள்ளுவர் சொல்கிறார். கல்வியைப் போன்ற சிறந்த செல்வம் ஏதுமில்லை என்பது குறள் நெறி. 3-ஆம் வகுப்பு, 5-ஆம் வகுப்பு, 8-ஆம் வகுப்புகளில் பொதுத்தேர்வு வைத்து, அதில் மாணவர்களை வடிகட்டி, தேர்ச்சி பெறாதவர்களுக்கு, 'தொழிற்கல்வி - விஸ்வகர்மா திட்டம்' என்ற முறையில் குலத்தொழில் நோக்கித் தள்ளுவது தேசிய கல்விக் கொள்கை. இதில் வள்ளுவர் எங்கே வந்தார்?*

*'கற்க கசடற' என்ற குறளைச் சுட்டிக் காட்டியுள்ளார் ஆளுநர். தொடக்க வகுப்பு களிலேயே தேர்ச்சி பெறவிடாமல் செய்து, படிக்கவே வாய்ப்பளிக்காவிட்டால், அவர்கள் எப்படி கசடறக் கற்பார்கள்? இந்தியும் சமஸ்கிருதமும் கட்டாயம் என்கிறது, தேசியக் கல்விக்கொள்கை. திருக்குறளில் எங்கே இந்தி-சமஸ்கிருதம்-மும்மொழிக் கொள்கை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது? எழுதிக் கொடுத்ததை வைத்து உளறும் ஆர்.என்.ரவி, 'சிரிப்பு போலீஸ்' போல சிரிப்பு கவர்னராக கோமாளித்தனம் செய்துகொண்டிருக்கிறார். தன்னை அறியாமல், பா.ஜ.க.வின் உண்மை முகத்தை தமிழ்நாட்டு மக்களிடம் அம்பலப்படுத்தி வருகிறார்.*

**...வினா தொடரும்.**

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.